ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2348/48 - 2023 සැප්තැම්බර් මස 08 වැනි සිකුරාදා - 2023.09.08

*2348/48 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இராஜதந்திர சிறப்புரிமைச் சட்டம்**

**4 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

1996 ஆம் ஆண்டின் இராஜதந்திர சிறப்புரிமைச் சட்டம் இல. 9 இன் பிரிவு 4 இன் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் எம். யூ. எம். அலி சப்ரி ஆகிய நான், இக்கட்டளையின் மூலமாக 2022, செத்தெம்பர் 14 அன்று கைச்சாத்திடப்பட்ட, காடு வேளாண்மை ஆராய்ச்சிக்கான சர்வதேச நிலையத்திற்கும் (International Centre for Research in Agroforestry (ICRAF)), இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இடையிலான புரவலர் நாட்டு உடன்படிக்கை மற்றும் அதன் ஏற்பாடுகளின் உறுப்புரைகள் IV, V, VI, IX, X, XI, XII, XIII, XIV, XV மற்றும் XVI இன் விதிமுறைகளைச் செயற்படுத்துவதற்குத் தேவையான அளவில், மேற்படி சட்டத்தின் ஏற்பாடுகள் பொருந்தும் என அறிவிக்கிறேன். இந்த உடன்படிக்கையின் சம்பந்தப்பட்ட உறுப்புரைகள் இங்குள்ள அட்டவணையில் விளக்கப்பட்டுள்ளன.

**எம். யு. எம். அலி சப்ரி** (ஜ.ச, பா. உ.)
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2023, ஒகத்து 25.

1A - PG 6481 — 256 (2023/08)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

**காடு வேளாண்மை ஆராய்ச்சிக்கான சர்வதேச நிலையத்திற்கும் (International Centre for Research in Agroforestry (ICRAF)), இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இடையிலான புரவலர் நாட்டு உடன்படிக்கை**

**உறுப்புரை IV**

**இந்த நிலையம் தொடர்பில் அரசாங்கத்தின் உறுதிமொழிகள்**

1. ICRAF அதன் உடமைகள், வருமானம் மற்றும் பிற சொத்துகள் ஆகியவை, எல்லா நேரடி வரிகளிலிருந்தும் விலக்குப்பெறும்.

2. சுங்க வரி, பெறுமதிசேர் வரி (VAT) மற்றும் வேறு எந்த வரிகள் அல்லது சகல பொருட்கள், உபகரணங்கள், பண்டங்கள், வாகனங்கள், இயந்திரங்கள், வெளியீடுகள் மற்றும் முன்னதாகவே சுங்கத்தினூடாக இசைவளிக்கப்பட்டுள்ளமைக்கு உட்பட்டு, உத்தியோகபூர்வ பாவனைக்காக ICRAF இனால் இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்படும் வழங்கல்களுக்கான இறை கட்டணங்கள் ஆகியவற்றிலிருந்து ICRAF இற்கு விலக்களிக்கப்படும். சுங்க வரிகள் மற்றும் தீர்வைகளின்றி இறக்குமதி செய்யப்படும் அத்தகைய பண்டங்களுக்கான பொருத்தமான வரிகள் மற்றும் தீர்வைகள் செலுத்தப்படாமல், நாட்டுக்குள் மாற்றப்படவோ அல்லது அப்புறப்படுத்தப்படவோ அல்லது குறிப்பிட்ட பண்டங்கள் விற்பனை செய்யப்படவோ, அதே மாதிரியான முன்னுரிமை கொண்டுள்ள நபர்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ மாற்றப்படவோ அல்லது மீள ஏற்றுமதி செய்யப்படவோ கூடாது.

3. ICRAF தனது அலுவலக பாவனைக்காக உள்நாட்டில் கொள்வனவு செய்யும் அல்லது ஒப்பந்த அடிப்படையில் வாங்கும் பண்டங்கள் மற்றும் உபகரணங்களுக்கு, வரிவிதிப்பிலிருந்து விலக்களிக்கப்படும்.

**உறுப்புரை V**

**இந்த நிறுவனத்தின் தொழில்நுட்ப, நிர்வாக அலுவலர் தொடர்பில் அரசாங்கத்தின் உறுதிமொழிகள்**

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிலுள்ள பிற சர்வதேச நிறுவனங்களில் ஒப்பீட்டுத் தரத்திலுள்ள அலுவலர்களுக்கு வழங்கும் சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகளுக்குக் குறையாமல், அரசாங்கம், ICRAF இன் தொழில்நுட்ப மற்றும் நிர்வாக அலுவலர்களுக்கும் அவர்களில் தங்கியிருப்போருக்கும் வழங்கும். இங்கு குறிப்பிட்டவற்றின் வரையறையின்றி, அரசாங்கமானது பின்வருவனவற்றிற்கு உறுதியளிக்கிறது.

(அ) ICRAF இனால் பெறப்படும் ஊதியம் அல்லது வருமானம் தொடர்பில், வருமான வரி அல்லது சமூக பாதுகாப்பு பங்களிப்பிலிருந்து விலக்களிப்பு ;

(ஆ) அவர்கள் நாட்டிற்கு வந்து முதல் ஆறு மாதங்களில் அல்லது பிற காலத்திற்குள், அவர்களால் இறக்குமதி செய்யப்படும் புதிய அல்லது பாவித்த தனிப்பட்ட மற்றும் வீட்டுப்பாவனைப் பொருட்கள் மற்றும் மோட்டார் வாகனங்களைப் பொறுத்தவரையில், அவை ஒவ்வொன்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நெறிமுறை வழிமுறைகளுக்குட்பட்டும், அவற்றிற்கான பொருத்தமான சுங்கவரி மற்றும் தீர்வைகள் செலுத்தப்படாமல் நாட்டிற்குள் விற்கப்படவோ அல்லது அதே சிறப்புரிமைகளைக் கொண்ட நபருக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ மாற்றப்படவோ அல்லது மீள ஏற்றுமதி செய்யப்படவோ கூடாது என்பதற்குட்பட்டு, இவற்றிற்கான சுங்க வரி, விற்பனை வரி மற்றும் பெறுமதி சேர் வரி (VAT) செலுத்துவதிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும் ;

(இ) அவர்களுக்கும் அவர்களில் தங்கியிருப்போருக்கும் தேசிய சேவை கடப்பாடுகள், வெளிநாட்டவர்களுக்கான பதிவு, குடிவரவுக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றிலிருந்து விலக்களித்தல் மற்றும் அவர்களுக்கும் அவர்களில் தங்கியிருப்போருக்கும் கட்டணம் ஏதுமின்றி நாட்டுக்குள் மீள உள்நுழைதல் மற்றும் அதைத் தொடர்ந்து புதிப்பித்தல் ஆகியவற்றை வழங்குதல் ;

(ஈ) சர்வதேச நெருக்கடிகளின் போது, பிற சர்வதேச நிறுவனங்களின் அலுவலர்களை தாயகம் திருப்பியனுப்புகையில் வழங்கப்படுவதைப் போன்ற அதே வசதிகளை, ICRAF அலுவலர்களுக்கும் அவர்களில் தங்கியிருப்போருக்கும் வழங்குதல் ;

(உ) பிற சர்வதேச நிறுவனங்களுக்குப் பொருத்தமான, நடப்பிலுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அந்நிய செலாவணி விதிமுறைகளுக்கு அமைவாக, ICRAF அலுவலர்கள் அல்லது அவர்களில் தங்கியிருப்போர், தமது தனிப்பட்ட பாவனைக்காக நியாயமான தொகை வெளிநாட்டு நாணயங்களை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்குள் கொண்டு வருவதற்கும் அத்தகைய தொகையை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வெளிப்புற வங்கி கணக்கு வசதியின் கீழ் மீள எடுப்பதற்கும் தமது தாய்நாட்டிற்கு அனுப்புவதற்கும் அனுமதித்தல் ;

(ஊ) ICRAF இன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான பிரயாணம், போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்களை தடையின்றிச் செய்வதற்கு அனுமதித்தல் ;

(எ) அவர்களது தனிப்பட்ட மற்றும் வீட்டுப் பொருட்களைக் கொண்டு வருவதற்கு சுங்க இசைவாணைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தல் மற்றும் அவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குதல் ;

(ஏ) அத்தகைய நபர்கள் (ICRAF இன் தொழில்நுட்ப மற்றும் நிர்வாக அலுவலர்) உத்தியோகபூர்வ தகுதியில் பேசும் அல்லது எழுதும் வார்த்தைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் சட்ட செயன்முறையிலிருந்து விலக்களித்தல் ; சம்பந்தப்பட்ட நபர் ICRAF இன் அலுவலர் பதவியிலிருந்து நிறுத்தப்பட்டாலும் அத்தகைய விலக்களிப்பானது தொடர்ந்து நீடிக்கும்.

2. மேலே பந்திகள் 1-(அ), 1-(ஈ), 1-(உ), 1-(ஊ), 1-(எ) ஆகியவற்றில் விரித்துரைக்கப்பட்டுள்ள சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகள், ICRAF இனால் பணியிலீடுபடுத்தப்படும் வதிவிடமற்ற ஆலோசகர்களுக்கும் அரசாங்கத்தினால் வழங்கப்படும்.

3. இந்த உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள், ICRAF இல் அலுவலர்களாக பணிபுரியும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரசைகளுக்குப் பொருந்தாது.

## உறுப்புரை VI

## ICRAF இன் பணிப்பாளர் நாயகம், பிரதிப் பணிப்பாளர் நாயகம் மற்றும் அமர்த்தப்பட்ட அதிகாரிகள் தொடர்பில் அரசாங்கத்தின் உறுதிமொழிகள்

1. பணிப்பாளர் நாயகம் மற்றும் எந்தவொரு அதிகாரிகளும் இலங்கைச் சனநாயக சோசலிக் குடியரசில் இல்லாத காலத்தில், அவர்களுக்கு மாற்றீடாக பணியாற்றுவோருக்கம், இலங்கையிலுள்ள பிற சர்வதேச மற்றும் அரசாங்கங்களுக்கு இடையிலான நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் சிறப்புரிமைகள், விலக்குரிமைகள் மற்றும் வசதிகள் வழங்கப்படும். இதே வசதிகள் அவர்களின் வாழ்க்கைத் துணைகள் மற்றும் பராயமடையாத பிள்ளைகளுக்கும் வழங்கப்படும்.

2. பிற சர்வதேச மற்றும் அரசாங்கங்களுக்கிடையிலான நிறுவனங்களில் ஒப்பீட்டுத் தரங்களைக் கொண்ட உறுப்பினர்களுக்கு வழங்கும் அதே சிறப்புரிமைகள், விலக்குரிமைகள் மற்றும் வசதிகளை, ICRAF இன் உதவிப் பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் பிற அதிகாரிகளுக்கும் அரசாங்கம் வழங்கும். இதே வசதிகள் அவர்களின் வாழ்க்கைத் துணைகள் மற்றும் பராயமடையாத பிள்ளைகளுக்கும் வழங்கப்படும். இதன்படி, நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் பெயர்ப்பட்டியலைப் பணிப்பாளர் நாயகம் அரசாங்கத்திற்கு வழங்குவதுடன், இப்பட்டியலில் ஏதேனும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டால், அதுபற்றியும் அறியத்தருதல் வேண்டும்.

## உறுப்புரை IX

## பொருட்கள் மற்றும் உபகரணங்களின் இறக்குமதி, ஏற்றுமதி, போக்குவரத்து மற்றும் பயன்பாடு

1. ICRAF ; 21.07.2015 ஆந் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி, 2014 இன் இலங்கை அணுசக்திச் சட்ட இல. 40, 2015 இன் விதிகள் இல. 1 மற்றும் சர்வதேச அணுசக்தி முகவரமைப்பினால் வெளியிடப்பட்ட பொதுவான பாதுகாப்புத் தேவைகள் பகுதி 3 மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிற தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிகள் ஆகியவற்றிக்குட்பட்டு, தனது தொழிற்பாடுகளுக்குத் தேவையான எல்லா விஞ்ஞான மற்றும் உயிரியல் பொருட்கள், வெளியீடுகள் மற்றும் வழங்கல்கள் உட்பட, அத்தகைய எல்லாப் பொருட்கள், உபகரணங்கள், கருவிகள், வாகனங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யலாம்.

2. மேற்படி சந்தி 1 இற்கு பாரபட்சமின்றி, ICRAF ஆனது, இலங்கையிலுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து தேவையான இசைவாணையைப் பெற்று பின்வருவனவற்றைத் தொடரலாம் :

(அ) தேசிய ஆள்புலத்தினுள் நியமிக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட வலயங்களில் பரீட்சார்த்த வேலைகளை மேற்கொள்ளலாம் ;

(ஆ) தனது சொந்த நோக்கங்களுக்காகவோ அல்லது பிராந்திய மற்றும் சர்வதேச ஒத்துழைப்புடனான திட்டங்களுக்காகவோ, தனது செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவையிருப்பின், கதிரியக்க பொருள் அல்லது உயிரியல் அல்லது உயிர் இரசாயனப் பொருட்களை இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யலாம், அனுப்பலாம் மற்றும் பயன்படுத்தலாம்.

3. மேலே பந்தி 2 (ஆ) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளம்போது, ICRAF ஆனது :

(அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இயற்கை மற்றும் சுற்றாடல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்குதல் ;

(ஆ) நாட்டிற்குள்ளோ அல்லது வெளியிலோ நோய்கள் மற்றும் கிருமிகள் பரவுவதைத் தடுப்பதற்காக, உயிரியல் மற்றும் மரபணுப் பொருட்கள் தொடர்பான தனிமைப்படுத்தல் மற்றும் ஆய்வு தொடர்பான நடைமுறையிலுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குதல் ;

(இ) பொதுவாக இந்த வஸ்துகள் மற்றும் மூலப்பொருட்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு, சர்வதேச பாதுகாப்பு தரநிலைகள் மற்றும் விவரக்குறிப்பீடுகளில் தரப்பட்டுள்ளவை உட்பட, எல்லா நியாயமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்தல்.

**உறுப்புரை X**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் ICRAF இற்கான வசதிகள்**

1. ICRAF இற்கான வசதிகள் ; அது தனது செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக கைக்கொண்டிருக்கும் நிலம் மற்றும் நிர்வாக வளாகம் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும். ICRAF தனது கட்டிடங்கள், வசதிகள் மற்றும் உபகரணங்களில் தனது சின்னத்தைப் பொறிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

2. தனது நிகழ்ச்சிகளை மேற்கொள்வதற்கு ICRAF இற்கு கூடுதலான நிலம் தேவைப்பட்டால், அத்தகைய நிலத்தைப் பெற்றுத்தர ஏற்பாடு செய்வதை அரசாங்கம் கருத்தில் கொள்ளும்.

**உறுப்புரை XI**

***மீறப்பட முடியாத வசதிகள்***

1. ICRAF இன் வளாகங்கள் மீறப்பட முடியாதவை.

2. ICRAF இன் அனைத்துப் பதிவேடுகள், கடிதங்கள், ஆவணங்கள் மற்றும் பிற பொருட்கள் மீறப்பட முடியாதவையாகும்.

3. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டு, அதன் செயற்பாட்டிற்குத் தேவையான அனைத்து நிபந்தனைகளையும் ஸ்தாபிப்பதற்காக, தனது வசதிகளுக்குள்ளே விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் ICRAF இற்கு உண்டு.

4. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டங்களுக்கு கீழ் கைது செய்யப்படுவதைத் தவிர்க்கும் நபர்கள், அல்லது இன்னொரு நாட்டுக்கு நாடு கடத்தப்படுவதற்காக அரசாங்கத்தினால் தேடப்படும் நபர்கள் அல்லது சட்ட செயன்முறையைத் தவிர்ப்பதற்காக முயற்சிக்கும் நபர்கள் தம்மிடம் அடைக்கலம் தேடுவதற்கான வசதிகளை, இந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்குப் பாரபட்சமின்றி ICRAF தவிர்த்தல் வேண்டும்.

## உறுப்புரை XII

### சட்ட செயன்முறையிலிருந்து விலக்குரிமை

1. எந்தவொரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலும் தனது விலக்குரிமையைக் கைவிட்டாலே தவிர, ICRAF, அதன் சொத்து, உடமைகள் மற்றும் பிற வசதிகள் எங்கிருப்பினும், யார் வைத்திருந்தாலும், எல்லாவிதமான சட்ட செயன்முறையிலிருந்தும் விலக்குரிமையை அனுபவிக்கும்.

## உறுப்புரை XIII

### தொடர்பாடல்கள் மற்றும் வெளியீடுகள்

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ள பிற சர்வதேச நிறுவனங்கள் அனுபவிக்கும் அதே உரிமைகளை ICRAF இன் உத்தியோகபூர்வ தொடர்பாடல்களும் அனுபவிப்பதற்கான உரிமை உண்டு.

2. பிற சர்வதேச நிறுவனங்களுக்கு வழங்கும் தன்மையை ஒத்து, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தகுதிவாய்ந்த அதிகாரிகளின் அனுமதிக்குட்பட்டு, வானொலி மற்றும் தொலைத்தொடர்பாடல் வசதிகளைப் பொருத்துவதற்கு அல்லது பாவிப்பதற்கு ICRAF இற்கு அனுமதி வழங்கப்படும்.

3. ICRAF இன் உத்தியோகபூர்வ மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளில் பொருத்தமானது என்ற வகையில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஆள்புலத்தில் அத்தகைய ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை தடையின்றி வெளியிடலாம். இருந்தபோதிலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு ஒரு தரப்பினராகவிருக்கும் அறிவார்ந்த ஆதன உரிமையைப் பொறுத்தவரையில், ICRAF இலங்கைச் சனநாயக சோசலிக் குடியரசின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க வேண்டும் என்பது புரிந்துகொள்ளப்படுகிறது.

## உறுப்புரை XIV

### நிதி ஏற்பாடுகள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அந்நிய செலாவணி தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்குட்பட்டு ;

1. ICRAF நிதிகளையோ அல்லது எந்தவிதமான நாணயங்களையோ ஒதுக்கி அல்லது பிடித்து வைக்கலாம் மற்றும் எந்தவொரு நாணயத்திலும் வங்கி மற்றும் அதே மாதிரியான கணக்குகளை இயக்கலாம்.

2. ICRAF தனது நிதிகளையோ அல்லது நாணயங்களை ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கோ அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினுள்ளோ தடையின்றி மாற்றிக்கொள்ளலாம் மற்றும் தான் வைத்திருக்கும் நாணயத்தைப் பிற நாணயங்களாக மாற்றிக்கொள்ளலாம் மற்றும் தனது நோக்கங்களுக்காக வேறு வேறு பிற வெளிநாட்டு பரிமாற்ற இயக்கத்தையும் மேற்கொள்ளலாம்.

## உறுப்புரை XV

### விலக்குரிமைகளைக் கைவிடுதல்

இந்த உடன்படிக்கையின் கீழ் அளிக்கப்படும் சிறப்புரிமைகள் மற்றும் விலங்குரிமைகள் யாவும் ICRAF இன் நலன்களுக்காகவே தவிர, சம்பந்தப்பட்டவர்களின் சொந்த நன்மைக்காகவல்ல. அத்தகைய நபர்களின் விலக்குரிமையானது நீதியின் போக்கிற்கு இடையூறாகவிருக்குமென பணிப்பாளர் நாயகம் அல்லது அவரின் பிரதிநிதி கருதினால், எந்தவித பாரபட்சமுமின்றி அத்தகைய நபர்களின் விலக்குரிமையைக் கைவிடும் கடப்பாட்டைக் கொண்டிருப்பார்.

**உறுப்புரை XVI**

***சிறப்புரிமைகளை துஷ்பிரயோகம் செய்தல்***

*1.* ICRAF, அதன் பணிப்பாளர் நாயகம் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் குடியிருக்கும் பிரதிநிதியின் வதிவிடம் ஆகியவை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் முறையான நீதி, நிருவாகம் மற்றும் சட்டங்களை அனுசரித்தல் போன்றவற்றை பின்பற்றுவதில் அரசாங்கத்திற்கு எந்நேரமும் ஒத்துழைப்புக் கொடுத்தல் வேண்டும். மற்றும், இந்த உடன்படிக்கையின் கீழ், ICRAF இற்கு வழங்கப்பட்ட சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகளை துஷ்பிரயோகம் செய்வதைத் தவிர்த்தல் வேண்டும்.

*2.* இந்த உடன்படிக்கை மூலம் அளிக்கப்பட்ட சிறப்புரிமை அல்லது விலக்குரிமை ஒன்று மீறப்பட்டுள்ளதென அரசாங்கம் கருதும் பட்சத்தில், அந்த வகையான மீறல்கள் இடம்பெற்றுள்ளதா என்று தீர்மானிப்பதற்காக, அரசாங்கத்திற்கும் ICRAF இற்கும் இடையில் ஆலோசனைகள் இடம்பெற்று, இதுபோன்ற மீறல்கள் மீளவும் இடம்பெறாதென்பது உறுதிசெய்யப்படுதல் வேண்டும். சிறப்புரிமை அல்லது விலக்குரிமை மீறப்பட்டுள்ளதென்பது நிரூபிக்கப்படும் பட்சத்தில், பணிப்பாளர் நாயகம், உறுப்புரை XV இல் குறிப்பிட்டுள்ள நடவடிக்கையைப் பிரயோகித்தல் வேண்டும்.

EOG 09-0073/1

---

***1996 ஆம் ஆண்டின் இராஜதந்திர சிறப்புரிமைச் சட்டம் இல: 9 இன்***

***பிரிவு 4 இன் கீழ் கட்டளை***

*1996 ஆம் ஆண்டின் இராஜதந்திர சிறப்புரிமைச் சட்டம் இல:9 இன் பிரிவு 4 இன் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் எம். யூ. எம். அலி சப்ரி ஆகிய நான், இக்கட்டளையின் மூலமாக, 1957 ஆம் ஆண்டு முதல் இலங்கை உறுப்பினராக இருந்துவரும் சர்வதேச அணுசக்தி முகவரமைப்பினைப் பொறுத்தவரையில் சிறப்புரிமைகள் மற்றும் பாதிப்பின்மைகள் குறித்த உடன்படிக்கையின் II, III, IV, V, VI மற்றும் VII ஆம் உறுப்புரைகளின் விதிமுறைகளைச் செயற்படுத்துவதற்குத் தேவையான அளவில் மேற்கூறிய சட்டத்தின் ஏற்பாடுகள் பொருந்தும் என அறிவிக்கிறேன். இங்கு இணைப்பு I இல் வரையறுக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட உறுப்புரைகளைப் பொறுத்தவரையில், ஒதுக்கீடுகளுக்குட்பட்டு இந்த உடன்படிக்கையின் சம்பந்தப்பட்ட உறுப்புரைகள் ஒப்பிக்கப்படும்.*

**எம். யு. எம். அலி சப்ரி** (ஜ.ச, பா. உ.)
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2023, ஓகத்து 25.*

***அட்டவணை***

***சர்வதேச அணுசக்தி முகவரமைப்பின் சிறப்புரிமைகள் மற்றும் பாதிப்பின்மைகள் குறித்த உடன்படிக்கை***

உறுப்புரை II

**சட்டநெறி ஆளுமை**

*பிரிவு 2*

இந்த முகவரமைப்பு சட்டநெறி ஆளுமையைக் கொண்டிருத்தல் வேண்டும். அது, (அ) ஒப்பந்தம் செய்யவும், (ஆ) அசையும் மற்றும் அசையா சொத்துக்களைப் பெறவும் அகற்றவும், மற்றும் (இ) சட்ட நடவடிக்கைகளைத் தொடர்வதற்குமான திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## உறுப்புரை III

### சொத்து, நிதி மற்றும் உடைமைகள்

*பிரிவு 3*

இந்த முகவரமைப்பானது ; எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனது விலக்குரிமையை கைவிட்டாலே தவிர, அதன் சொத்து மற்றும் உடைமைகள் எங்கிருந்தாலும் அல்லது யார் வைத்திருந்தாலும், எல்லாவிதமான சட்ட செயன்முறைகளிலிருந்தும் பாதிப்பின்மையைக் கொண்டிருக்கும். ஆனபோதிலும், பாதிப்பின்மையை விட்டுவிடுதலானது, எந்தவிதமான மரணதண்டனை நடவடிக்கைக்கும் நீடிக்கப்படாது என்பது புரிந்துகொள்ளப்படுகிறது.

*பிரிவு 4*

இந்த முகவரமைப்பின் வளாகம் மீறப்படமுடியாததாகும். இந்த முகவரமைப்பின் சொத்து மற்றும் உடைமைகள் எங்கிருந்தாலும் அல்லது யார் வைத்திருந்தாலும், எந்தவிதமான நிறைவேற்று அதிகார, நிருவாக, நியாயாதிக்க அல்லது சட்டரீதியான நடவடிக்கைகளினாலோ அங்கு தேடுதல், கோருதல், பறிமுதல் செய்தல், அபகரித்தல் மற்றும் வேறெந்த வகையான குறுக்கீடுகளிலிருந்தோ விலக்கப்படுதல் வேண்டும்.

*பிரிவு 5*

இந்த முகவரமைப்புகள் எங்கிருப்பினும், அவற்றிற்குச் சொந்தமான ஆவணக்காப்பகங்கள், மற்றும் பொதுவான ஆவணங்கள் எல்லாம் அவற்றிற்கே சொந்தமானவை, அங்கேயே இருக்கவேண்டியவை, மீறப்படமுடியாதவை.

*பிரிவு 6*

இந்த முகவரமைப்பானது, நிதிக்கட்டுப்பாடுகள், விதிமுறைகள் அல்லது எந்தவிதமான சட்ட இசைவுத் தாமதங்களாலோ கட்டுப்படுத்தப்படாமல்:

(அ) நிதி, பவுண் அல்லது எந்த வகையான நாணயங்களையோ வைத்திருக்கலாம் மற்றும் எந்த நாணயத்திலும் கணக்குகளை இயக்கலாம்;

(ஆ) தனது நிதி, பவுண் அல்லது நாணயங்களை உள்நாட்டுக்குள்ளோ அல்லது வேறு நாடுகளுக்கோ சுதந்திரமாக மாற்றலாம் மற்றும் வேறு நாணயமாக மாற்றிக்கொள்ளலாம்.

*பிரிவு 7*

பிரிவு 6 இன் கீழ் இந்த முகவரமைப்பு தனது உரிமைகளைச் செயன்முறைப்படுத்தும்போது, அந்த முகவரமைப்பின் நலன்களுக்கு தீங்கு விளைவிக்காமல் இந்த உடன்படிக்கையின் தரப்பினராகவுள்ள எந்த நாட்டினதும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பிரதிநிதித்துவத்திற்கும் பயனை வழங்கமுடியும் என கருதப்படுவதால், அப்பிரதிநிதித்துவத்திற்கு உரிய கரிசனை அளிக்கவேண்டும்.

*பிரிவு 8*

இந்த முகவரமைப்பு, அதன் உடைமைகள், வருமானம் மற்றும் பிற சொத்துக்கள் போன்றவை:

(அ) எல்லா நேரடியான வரிகளிலிருந்தும் விதிவிலக்கினைப் பெறும். ஆனபோதிலும், பொதுப் பயன்பாட்டுச் சேவைகளுக்கான கட்டணங்களை விட அதிகமாக இல்லாத வரிகளுக்கான விலக்கினை இந்த முகவரமைப்பு கோராது;

(ஆ) இந்த முகவரமைப்பு, தனது உத்தியோகபூர்வ பாவனைக்காக இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யும் பண்டங்களைப் பொறுத்தவரையில் அவற்றுக்கான சுங்க வரிகள், தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. ஆனபோதிலும், அந்த விலக்குகளின் கீழ் இறக்குமதிசெய்யப்பட்ட அந்த பண்டங்கள், இறக்குமதி செய்யப்பட்ட நாட்டின் அரசாங்கத்தின் நிபந்தனைகளுக்கு கீழன்றி, அந்த நாட்டினுள் விற்கப்படமாட்டாது;

(இ) அதன் வெளியீடுகளைப் பொறுத்தவரையில், இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் மீதான வரிகள், தடைகளிலிருந்து விலக்களிக்கப்படும்.

*பிரிவு 9*

*இந்த முகவரமைப்பானது ஒரு பொது விதியாக, செலுத்தவேண்டிய விலையின் ஒரு பகுதியான அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களின் விற்பனைகள் மீதான வரிகளிலிருந்தும் தீர்வைகளிலிருந்தும் விலக்கு கோராதபோதிலும், முகவரமைப்பானது, சொத்துக்களின் உத்தியோக பாவனைக்காக முக்கியமான கொள்முதல்களை மேற்கொள்ளும்போது, அச்சொத்துக்கள் மீதான அந்த வரிகள் மற்றும் தீர்வைகள் அறவிடப்பட்டால் அல்லது அறவிடக்கூடியதாகவிருந்தால், இந்த உடன்படிக்கையின் தரப்பினராகவுள்ள நாடுகள் எப்போது முடிந்தாலும் தீர்வை அல்லது வரியின் அளவைக் குறைப்பதற்கு அல்லது திரும்பப் பெறுவதற்குப் பொருத்தமான நிர்வாக ஏற்பாடுகளைச் செய்யும்.*

**உறுப்புரை IV**

**தொடர்பாடல்கள் சம்பந்தப்பட்ட வசதிகள்**

*பிரிவு 10*

*இந்த உடன்படிக்கையின் தரத்தவரான ஒவ்வொரு நாட்டின் ஆள்புலத்திலும், அந்த நாடு தரத்தவராக இருக்கும் எந்தவொரு சர்வதேச மரபுகள், ஒழுங்குமுறைகள் மற்றும் ஏற்பாடுகளுடன் இணக்கமாக இருக்கும் வரை, பதவிகள் மற்றும் தொலைத்தொடர்புகளுக்கான முன்னுரிமைகள், விகிதங்கள் மற்றும் வரிகள் மற்றும் பத்திரிகை மற்றும் வானொலிக்கான தகவல்களுக்கான பத்திரிகை விகிதங்கள் போன்றவற்றில் பிந்தைய அரசின் இராஜதந்திர பணி உட்பட, அதன் அதிகாரப்பூர்வ தகவல்தொடர்புகளுக்கு, வழங்கப்பட்டதை விட குறைந்த சாதகமான நடத்துமுறையை இந்த முகவரமைப்பு அனுபவிக்கும்.*

*பிரிவு 11*

*இந்த முகவரமைப்பின் உத்தியோகபூர்வ தொடர்பாடல்கள் மற்றும் பிற உத்தியோகபூர்வ தொடர்பாடல்கள் தணிக்கை செய்யப்படமாட்டா.*

*இந்த முகவரமைப்பு குறியீடுகளைப் பயன்படுத்துவதற்கும், தனது கடிதங்கள் மற்றும் பிற உத்தியோகபூர்வ தொடர்பாடல்களை விரைவு அஞ்சல் மூலமாகவோ அல்லது முத்திரையிடப்பட்ட பைகளிலோ அனுப்புவதற்கும் பெறுவதற்குமான உரிமையைக் கொண்டுள்ளதுடன், அவை, இராஜதந்திர விரைவஞ்சல் மற்றும் பைகளுக்கு இருப்பதைப் போன்ற அதே விலக்குரிமை மற்றும் சிறப்புரிமைகளைக் கொண்டிருக்கும்.*

*அரச தரப்பினருக்கும் முகவரமைப்பிற்கும் இடையிலான இந்த உடன்படிக்கையினால் தீர்மானிக்கப்படவேண்டிய பொருத்தமான பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை, இப்பிரிவிலுள்ள எதுவும் ஏற்றுக்கொள்வதை தடுப்பதாக பொருள் கொள்ளப்படாது.*

*இந்த ஒப்பந்தத்தின் மாநிலத் தரப்பினருக்கும் ஏஜென்சிக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் மூலம் தீர்மானிக்கப்படவேண்டிய பொருத்தமான பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை ஏற்றுக்கொள்வதைத் தடுக்க இந்த பிரிவில் உள்ள எதுவும் பொருள்கொள்ளப்படாது.*

**உறுப்புரை V**

**உறுப்பினர்களின் பிரதிநிதிகள்**

*பிரிவு 12*

*உறுப்பினர்களின் பிரதிநிதிகள் இந்த முகவரமைப்பினால் கூட்டப்படும் கூட்டங்களில் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளும்போதும் அக்கூட்டங்கள் நடக்கும் இடங்களுக்கு போய் வரும்போதும் பின்வரும் சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகளை அனுபவிப்பர் :*

*(அ) தனிப்பட்ட முறையில் கைது செய்யப்படுதல் அல்லது தடுத்து வைக்கப்படுதல் மற்றும் அவர்களின் தனிப்பட்ட பைகளைப் பறிமுதல் செய்தல் மற்றும் பேசப்படும் அல்லது எழுதப்படும் வார்த்தைகள் மற்றும் அவர்கள் தமது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டில் மேற்கொள்ளும் சகல செயற்பாடுகளிலிருந்தும் விலக்குரிமை, மற்றும் எல்லா வகையான சட்ட செயன்முறைகளிலிருந்தும் விலக்குரிமை;*

*(ஆ) சகல பத்திரங்கள் மற்றும் ஆவணங்களை மீறப்பட முடியாமை;*

*(இ) குறியீடுகளைப் பயன்படுத்தும் மற்றும் ஆவணங்கள் அல்லது கடித தொடர்பாடல்களை விரைவஞ்சல் மூலமாகவோ அல்லது முத்திரையிடப்பட்ட பைகள் மூலமாக பெறுவதற்கான உரிமை;*

(ஈ) தமது மற்றும் தமது வாழ்க்கைத் துணைவர்களது குடிவரவு கட்டுப்பாடுகளிலிருந்தும், தாம் விஜயம் செய்யும் அல்லது தமது செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது கடந்துசெல்லும் நாட்டில் வெளிநாட்டவர்களைப் பதிவு செய்தல் அல்லது தேசிய சேவை கடப்பாடுகளிலிருந்தும் விலக்கு;

(உ) நாணயம் அல்லது நாணயமாற்றுக் கட்டுப்பாடுகள் தொடர்பான அதே வசதிகள் தற்காலிக உத்தியோகபூர்வ பணிகளிலுள்ள வெளிநாட்டு அரசாங்கங்களின் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படுதல்;

(ஊ) இராஜதந்திர பணிகளின் ஒப்பிடக்கூடிய தரவரிசையிலுள்ள உறுப்பினர்களுக்கு அவர்களின் தனிப்பட்ட சாமான்கள் தொடர்பான அதே விலக்குரிமைகள் மற்றும் வசதிகள் வழங்கல்.

பிரிவு 13

இந்த முகவரகத்தினால் கூட்டப்படும் கூட்டங்களில் அதன் உறுப்பினர்களின் பிரதிநிதிகளுக்கு முழுமையான பேச்சு சுதந்திரம் மற்றும் அவர்கள் தமது கடமைகளைச் செய்யும்போது முழுமையான சுயாதீனம், அவர்கள் பேசும் அல்லது எழுதும் வார்த்தைகளுக்கு சட்ட நடவடிக்கைகளிலிருந்து விலக்கு மற்றும் அவர்கள் தமது கடமைகளின்போது செய்யும் அனைத்துச் செய்கைகளுக்கும், சம்பந்தப்பட்டோர் அத்தகைய கடமைகளை நிறைவேற்றுவதில் ஈடுபடாவிட்டாலும், தொடர்ந்தும் இசைவளித்தல்.

பிரிவு 14

எந்தவொரு வரிவிதிப்பு முறையும் குடியிருப்பைப் பொறுத்தது எனில், இந்த முகவரமைப்பின் உறுப்பினர்களின் பிரதிநிதிகள் தமது கடமைக்காலத்தின்போது, இம்முகவரமைப்பினால் கூட்டப்படும் கூட்டங்களில் ஒரு உறுப்பு நாட்டில் இருக்கும் காலமானது, வசிக்கும் காலமாக கருதப்படாது.

பிரிவு 15

உறுப்பினர்களின் பிரதிநிதிகளுக்கு அளிக்கப்படும் சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகள் தனிப்பட்டவர்களின் தனிப்பட்ட நன்மைகளுக்காக அல்ல. ஆனால், முகவரமைப்புடன் தொடர்புடைய அவர்களது செயற்பாடுகளைச் சுதந்திரமாக நடத்துவதைப் பாதுகாப்பதற்காகவே. இதன் விளைவாக, உறுப்பினரின் கருத்துப்படி, நீதியின் போக்கைத் தடுக்கும், மற்றும் பாரபட்சமின்றி அதை தள்ளுபடி செய்யக்கூடிய எந்தவொரு சந்தர்ப்பத்திலும், விலக்குரிமை கொடுக்கப்பட்ட நோக்கத்திற்காக ஒரு உறுப்பினருக்கு உரிமை உள்ளது மட்டுமல்லாமல் அதன் பிரதிநிதிகளின் விலக்குரிமையை தள்ளுபடி செய்யும் கடமையும் உள்ளது.

பிரிவு 16

பிரிவுகள் 12,13 மற்றும் 14 இன் ஏற்பாடுகள், அந்த நபர் பிரஜையாக இருக்கும் அல்லது அவர் பிரதிநிதியாக இருக்கும் நாட்டின் அதிகாரிகளுக்குப் பொருந்தாது.

## உறுப்புரை VI

### அதிகாரிகள்

பிரிவு 17

இந்த உறுப்புரையின் ஏற்பாடுகள் மற்றும் உறுப்புரை IX பொருந்தக்கூடிய அதிகாரிகளின் பெயர்களை, இந்த உடன்படிக்கையின் தரப்பினரான அனைத்து நாடுகளதும் அரசாங்கங்களுக்கும் இந்த முகவரமைப்பு அவ்வப்போது தெரிவிக்கும்.

பிரிவு 18

(அ) இந்த முகவரமைப்பின் அதிகாரிகள்:

i. தமது உத்தியோகபூர்வ தகுதியில், அவர்களால் பேசப்படும் அல்லது எழுதப்படும் வார்த்தைகள் அல்லது எல்லா செயற்பாடுகளையும் பொறுத்தவரையில், சட்ட செயற்பாடுகளிலிருந்து விலக்கப்படுவர்;

ii. முகவரமைப்பினால் அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் ஊதியங்களைப் பொறுத்தவரையில், ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் பயன்பெறும் அதே நிபந்தனைகளையும் அதே வரிவிலக்குகளையும் அனுபவிப்பர்;

iii. அவர்களுடன் அவர்தம் வாழ்க்கைத் துணைகள் மற்றும் அவர்களைச் சார்ந்திருக்கும் உறவினர்களும், குடிவரவு கட்டுப்பாடுகள் மற்றும் பிற நாட்டவர் பதிவு ஆகியவற்றிலிருந்து விலக்குரிமை பெறுவர்;

iv. பரிமாற்ற வசதிகள் தொடர்பில், இராஜதந்திர பணிகளில் ஒப்பீட்டு தரவரிசையிலுள்ள அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதே சிறப்புரிமைகளைப் பெறுவர்;

v. சர்வதேச நெருக்கடிகளின்போது, இராஜதந்திர பணிகளில் ஒப்பீட்டு தரவரிசையிலுள்ள அதிகாரிகளுக்கு வழங்கப்படுவதைப் போலவே, இவர்களுடன் இவர்களது வாழ்க்கைத்துணைகள் மற்றும் இவர்களைச் சார்ந்துள்ள உறவினர்களுக்கான தாயகம் திரும்பும் வசதிகள் வழங்கப்படும்;

vi. சம்பந்தப்பட்ட நாட்டில் தமது பதவியை முதல் தடவையாக ஏற்கும்போது, தமது தளபாடங்கள் மற்றும் உடைமகளை சுங்க வரியின்றி இறக்குமதி செய்யும் உரிமையைப் பெறுவர்.

(ஆ) இந்த முகவரமைப்பின் அதிகாரிகள், இந்த முகவரமைப்பின் நியதிச்சட்டத்தின் உறுப்புரை XII இன் கீழ், ஒரு பரிசோதகரின் செயற்பாடுகளை அல்லது அதன் உறுப்புரை XI இன் கீழ், ஒரு திட்ட பரிசோதகரின் செயற்பாடுகளைச் செய்யும்போது, மற்றும் தமது உத்தியோகபூர்வ தகுதியில் இச்செயற்பாடுகளைச் செய்வதற்காக பயணம் செய்யும்போதும், அத்தகைய செயற்பாடுகளைத் திறம்பட செயற்படுத்துவதற்குத் தேவையான, இந்த உடன்படிக்கையின் உறுப்புரை VII இல் முன்வைக்கப்பட்ட, அனைத்து கூடுதல் சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகளையும் அனுபவிப்பர்.

பிரிவு 19

இந்த முகவரமைப்பின் அதிகாரிகள், தாம் பிரஜைகளாக இருக்கும் நாடுகள் தொடர்பில், விலக்களிப்பு அவர்களின் கடமைகள் காரணமாக அவர்களின் பெயர்கள் உள்ள முகவரமைப்பின் அதிகாரிகளுக்கு மட்டுமே அத்தகைய விலக்களிப்பு வரையறுக்கப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, தேசிய சேவை கடப்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள்.

இந்த முகவரமைப்பின் அதிகாரிகள், தேசிய சேவைக் கடப்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்படுவர். அவர்கள் பிரஜைகளாகவிருக்கும் நாடுகள் தொடர்பில் அந்த விலக்குரிமைகள் முகவரமைப்பின் அதிகாரிகளுக்கு வரையறுக்கப்படும். அவர்களின் பெயர்கள், அவர்களின் கடமைகளின் காரணமாக, அந்த முகவரமைப்பின் பணிப்பாளர் நாயகத்தினால் தொகுக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டு, சம்பந்தப்பட்ட நாட்டினால் அங்கீகரிக்கப்படும்.

முகவரமைப்பின் பிற அதிகாரிகள் தேசிய சேவைக்கு அழைக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட நாடு, முகவரமைப்பின் வேண்டுகோளின் பேரில், அத்தியாவசியப் பணிகளைத் தொடர்வதில் தடங்கலைத் தவிர்ப்பதற்குத் தேவையான அத்தகைய அதிகாரிகளை அழைப்பதை தற்காலிகமாக ஒத்திவைத்தல் வேண்டும்.

பிரிவு 20

மேலே பிரிவுகள் 18 மற்றும் 19 இல் குறிப்பிடப்பட்ட சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகளுக்கு கூடுதலாக, இந்த முகவரமைப்பின் பணிப்பாளர் நாயகம் தனது கடமையில் இல்லாதபோது அவர் சார்பாக செயற்படும் எந்தவொரு அதிகாரி உட்பட, அவர் சார்பாகவும், அவரது வாழ்க்கைத்துணை மற்றும் பருவமடையாத பிள்ளைகள் ஆகியோருக்கும், சர்வதேச சட்டப்படி, இராஜதந்திர தூதுவர்கள் அவர்கள் சார்பாக, அவர்களின் வாழ்க்கைத்துணைகள் மற்றும் பருவமடையாத பிள்ளைகள் ஆகியோருக்கும் இந்த சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகள், விலக்குகள் மற்றும் வசதிகள் வழங்கப்படும். அதே சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகள், விலக்குகள் மற்றும் வசதிகளும் இந்த முகவரமைப்பின் பிரதி பணிப்பாளர் நாயகத்திற்கு அல்லது அதற்குச் சமமான தரமுள்ள ஒரு அதிகாரிக்கு அளிக்கப்படும்.

பிரிவு 21

சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகள், முகவரமைப்பின் நலனுக்காக மட்டுமே அதன் அதிகாரிகளுக்கு வழங்கப்படுமே தவிர, அந்த தனிப்பட்டவர்களின் தனிப்பட்ட நன்மைக்காகவல்ல. எந்தவொரு நிகழ்விலும் விலக்குரிமையானது நீதி வழங்கலுக்குத் தடையாகவிருக்குமென முகவரமைப்பு கருதும்போதும், எந்தவொரு நிபுணரதும் விலக்குரிமையை தள்ளுபடிசெய்யும் உரிமை முகவரமைப்பிற்கு உள்ளதுடன், அது முகவரமைப்பின் நலன்களுக்காக பாரபட்சமின்றி தள்ளுபடி செய்யப்படலாம்.

*பிரிவு 22*

இந்த முகவரமைப்பானது இந்த உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புரிமைகள், விலக்குகள் மற்றும் வசதிகளுடன் தொடர்புடைய எந்தவொரு முறைகேடுகளும் ஏற்படுவதைத் தடுக்கவும், நீதியை முறையான நிர்வாகத்தை எளிதாக்குவதற்கும், காவல்துறை விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கும், உறுப்பு நாடுகளின் பொருத்தமான அதிகாரிகளுடன் எல்லா நேரங்களிலும் ஒத்துழைக்கும்.

## உறுப்புரை VII

### முகவரமைப்பிற்கான பணிகளின் நிபுணர்கள்

*பிரிவு 23*

முகவரமைப்பின் குழுக்களில் சேவையாற்றும் அல்லது முகவரமைப்பின் நியதிச்சட்டத்தின் உறுப்புரை XII இன் கீழ் முகவரமைப்பிற்காக பரிசோதகர்களாக பணியாற்றும் நிபுணர்கள் உட்பட, இதன் உறுப்புரை XI இன் கீழ் திட்ட பரிசோதகர்களாக பணியாற்றுவோர், அவர்களது செயற்பாடுகளைத் திறம்பட செயற்படுத்துவதற்குத் தேவையான, அத்தகைய குழுக்கள் மற்றும் பணிகள் குறித்த சேவைகள் தொடர்பாக மேற்கொள்ளும் பிரயாணங்களில் செலவிடும் நேரங்கள் உட்பட, பின்வரும் சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகள் வழங்கப்படும்:

அ) தனிப்பட்ட முறையில் கைது செய்யப்படுதல் அல்லது தடுத்து வைக்கப்படுதல் மற்றும் அவர்களது தனிப்பட்ட பொதிகளைப் பறிமுதல் செய்தல் ஆகியவற்றிலிருந்து விலக்குரிமை;

ஆ) தமது உத்தியோகபூர்வ செயற்பாடுகளில் பேசும் அல்லது எழுதும் வார்த்தைகள் மற்றும் அவர்களது செயல்களைப் பொறுத்தவரையில், எல்லா வகையான சட்ட செயன்முறைகளிலிருந்தும் விலக்குரிமை, சம்பந்தப்பட்ட நபர்கள் முகவரமைப்பின் குழுக்களில் இனியும் சேவையாற்றாத அல்லது பணிகளில் ஈடுபடுத்தப்படாதவர்களாக இருந்தபோதிலும், அந்த விலக்குரிமை தொடரும்;

இ) சகல பத்திரங்கள் மற்றும் ஆவணங்கள் மீறப்படாமை;

ஈ) முகவரமைப்புடனான தமது தொடர்பாடல்களின் நோக்கத்திற்காக, குறியீடுகளைப் பயன்படுத்துதல் மற்றும் விரைவஞ்சல் அல்லது முத்திரையிட்ட பைகள் மூலம் ஆவணங்கள் மற்றும் கடிதங்களைப் பெறுதலுக்கான உரிமை;

உ) தற்காலிக உத்தியோகபூர்வ பணிகளில் வெளிநாட்டு அரசாங்கங்களின் பிரதிநிதிகளுக்கு நாணயம் மற்றும் நாணயமாற்ற கட்டுப்பாடுகளைப் பொறுத்தவரையில் ஒரே மாதிரியான வசதிகள் வழங்கப்படுதல்;

ஊ) இராஜதந்திர பணிகளின் ஒப்பிடக்கூடிய தரவரிசை உறுப்பினர்களுக்கு அவர்களின் தனிப்பட்ட பொதிகள் தொடர்பில் ஒரேமாதிரியான விலக்குரிமைகள் மற்றும் வசதிகள் வழங்குதல்.

*பிரிவு 24*

பிரிவு 23 இன் துணைப் பந்திகள் (இ) மற்றும் (ஈ) இலுள்ள எதுவும், இந்த உடன்படிக்கையின் அரச தரப்பிற்கும் முகவரமைப்பிற்கும் இடையிலான உடன்படிக்கையினால் தீர்மானிக்கப்படும் பொருத்தமான பாதுகாப்பு முன்னெச்சரிக்கையை ஏற்றுக்கொள்வதைத் தடுக்கும் என பொருள்கொள்ளலாகாது.

*பிரிவு 25*

முகவரமைப்பின் நலனுக்காகவே அதன் நிபுணர்களுக்கு சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகள் வழங்கப்படுமே தவிர, தனிப்பட்டவர்களின் நலன்களுக்காகவல்ல. எந்தவொரு நிகழ்விலும் விலக்குரிமையானது நீதி வழங்கலுக்குத் தடையாகவிருக்குமென முகவரமைப்பு கருதும்போதும், எந்தவொரு நிபுணரதும் விலக்குரிமையை தள்ளுபடிசெய்யும் உரிமை முகவரமைப்பிற்கு உண்டு என்பதுடன், அது முகவரமைப்பின் நலன்களுக்காக பாரபட்சமின்றி தள்ளுபடி செய்யவும் படலாம்.

இணைப்பு I

i. *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கமானது, உறுப்புரை* II, *பிரிவு 2 (ஆ) இன் கீழ், அசையாச் சொத்தை பெறுதலுக்கான மற்றும் அகற்றுவதற்கான சர்வதேச அணுசக்தி முகவரமைப்பின் தகுதி, தேசிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு உரிய மதிப்பளித்துச் செயற்படுத்தப்படும் என இதன் மூலம் அறிவிக்கிறது.*

ii. *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கமானது, பிரிவு 18* (ii), (iii), (iv) *மற்றும்* (v) *இல் வழங்கப்படும் சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகளின் பயன்பாடு, இலங்கையில் சேவையாற்றும் சர்வதேச அணுசக்தி முகவரக* (IAEA) *அதிகாரிகளுக்கு வழங்கப்படாது.*

iii. *சொல்லப்படும் அல்லது எழுதப்படும் வார்த்தைகள் அல்லது உத்தியோகபூர்வ செயற்பாடுகளின்போது செய்யப்படும் செயற்பாடுகள் தொடர்பில் வழங்கப்படும் விலக்குரிமை தவிர்ந்த, பிரிவு 23 (அ), 23 (ஆ) இல் வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகளின் பயன்பாடு, 23 (இ) உத்தியோகபூர்வ பத்திரங்கள் மற்றும் ஆவணங்களுக்கு வழங்கப்படும் விலக்குரிமை தவிர்ந்த மற்றும் 23 (உ) இலங்கையில் சேவையாற்றும் இலங்கைப் பிரஜைகளான சர்வதேச அணுசக்தி முகவரக* (IAEA) *அதிகாரிகளுக்கு வழங்கப்படாது.*

iv. *பிரிவுகள் 20 மற்றும் 32 இருந்தபோதிலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் தேசிய சட்டம், கடமைகள் மற்றும் கலால் வரிகள் தொடர்பான தேசிய கொள்கைகளைப் பயன்படுத்துவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.*

v. *எந்தவொரு நாணயத்திலும் நிதி, தங்கம் அல்லது நாணயம் மற்றும் கணக்குகளை வைத்திருப்பது தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் பிரிவு 6 இன் கீழ் இலங்கை ஆள்புலத்தில் அத்தகைய நாணயத்தை மாற்றுதல் மற்றும் மாற்றக்கூடியவை ஆகியவை, இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கத்தில் நடைமுறையிலுள்ள பொருத்தமான தேசிய சட்ட விதிகளுக்கு உட்பட்டவை.*

EOG 09-0073/2

---

**1996 ஆம் ஆண்டின் இராஜதந்திர சிறப்புரிமைச் சட்டம் இல.: 9**

**பிரிவு 4 இன் கீழ் கட்டளை**

*1996 ஆம் ஆண்டின் இராஜதந்திர சிறப்புரிமைச் சட்டம் இல. 9 இன் பிரிவு 4 இன் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் எம்.யூ.எம். அலி சப்ரி ஆகிய நான், இக்கட்டளையின் மூலமாக, உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனத்தின்* (Global Green Growth Institute (GGGI)) *சட்ட நிலைப்பாடு, சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகள் தொடர்பாக, அந்நிறுவனத்திற்கும் இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசிற்கும் இடையிலான உடன்படிக்கையின் உறுப்புரைகள் 2,3,4,5,6,7,8,9,10 மற்றும் 11 இன் விதிமுறைகளைச் செயற்படுத்துவதற்குத் தேவையான அளவில், இந்த உடன்படிக்கையின் மேற்குறித்த சட்டத்தின் ஏற்பாடுகள் பொருந்தும் என அறிவிக்கிறேன். 07, பெப்புருவரி மாதம் 2023 அன்று கைச்சாத்திடப்பட்ட இந்த உடன்படிக்கையின் சம்பந்தப்பட்ட உறுப்புரைகள் இங்குள்ள அட்டவணையில் விளக்கப்பட்டுள்ளன.*

**எம். யு. எம். அலி சப்ரி** *(ஜ. ச. பா. உ.),*
*வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்.*

கொழும்பு,
*2023, ஓகத்து 25.*

## அட்டவணை

## உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனத்தின் (Global Green Growth Institute (GGGI)) சட்ட நிலைப்பாடு, சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகள் தொடர்பாக, அந்நிறுவகத்திற்கும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிற்கும் இடையிலான உடன்படிக்கை

### உறுப்புரை 2

### சட்ட ஆளுமை மற்றும் திறன்கள்

(1) GGGI என்பது சர்வதேச சட்ட ஆளுமை கொண்ட ஒரு சர்வதேச நிறுவனமாகும்.

(2) GGGI ஆனது, (i) ஒப்பந்தம் செய்யவும், (ii) அசையும் மற்றும் அசையா சொத்துக்களைப் பெறவும் அகற்றவும், மற்றும் (iii) சட்ட நடவடிக்கைகளைத் தொடர்வதற்குமான நீதிமுறை ஆளுமை மற்றும் சட்ட திறனைக் கொண்டிருக்கும்.

(3) GGGI, ஒரு சர்வதேச நிறுவனத்திற்குரிய தற்சார்பு மற்றும் செயற்பாட்டுச் சுதந்திரத்தைக் கொண்டிருக்கும்.

### உறுப்புரை 3

### சொத்துக்கள் மற்றும் உடமைகள்

(1) GGGI மற்றும் அதன் சொத்து மற்றும் உடமைகள், எங்கிருந்தாலும், எவர் வைத்திருந்தாலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனது விலக்குரிமையை அது கைவிடுவதாக அறிவித்தாலே தவிர, எல்லா விதமான சட்ட செயன்முறைகளிலிருந்தும் விலக்குரிமைகளை அனுபவிக்கும். ஆனபோதிலும், விளக்கமாக குறிப்பிடப்பட்டாலே தவிர, விலக்குரிமைகளை கைவிடுவதானது எந்த வகையான நிறைவேற்று நடவடிக்கைக்கும் விஸ்தரிக்கப்படாது என்பது புரிந்துகொள்ளப்படுகிறது.

(2) GGGI இன் சொத்து மற்றும் உடமைகள் எங்கிருந்தாலும் அல்லது யார் வைத்திருந்தாலும், தேடுதல், கோருதல், பறிமுதல் செய்தல், கையகப்படுத்தல் அல்லது நிறைவேற்று அதிகார, நிருவாக, நியாயாதிக்க அல்லது எந்தவகையான சட்டரீதியான குறுக்கீடுகளிலிருந்தும் விலக்குரிமையைக் கொண்டிருக்கும்.

(3) GGGI இன் ஆவணக் காப்பகங்கள் எங்கிருந்தாலும் மீறப்படமுடியாதவையாகும்.

(4) GGGI இன் நோக்கம் மற்றும் செயற்பாடுகளை திறம்பட நிறைவேற்றுவதற்குத் தேவையான அளவிற்கும், இந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கும் உட்பட்டு, GGGI இன் சொத்துக்கள் மற்றும் உடமைகள் அனைத்தும், வரையறைகள், விதிமுறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் எந்தவொரு தன்மையினதுமான தடைகளிலிருந்தும் விலக்குரிமையைக் கொண்டிருக்கும்.

### உறுப்புரை 4

### வரிவிதிப்பு மற்றும் சுங்கத் தீர்வைகளிலிருந்து விலக்கு

(1) GGGI, அதன் உடமைகள், வருமானம் மற்றும் பிற சொத்துக்களுக்கு:

(அ) குறிப்பாக வழங்கப்பட்ட சேவைகளுக்கான கட்டணங்களைத் தவிர, எல்லா நேரடியான வரிகளிலிருந்தும் விலக்களிப்பு;

(ஆ) GGGI தனது உத்தியோகபூர்வ பாவனைக்காக இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யும் பொருட்களைப் பொறுத்தவரையிலும் மற்றும் GGGI இன் எந்தவொரு வெளியீடுகளெனினும், அவற்றின் மீதான தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலிருந்து விலக்களிப்பு. ஆனபோதிலும், அந்த விலக்களிப்பின் கீழ் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள், இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளுக்குக் கீழன்றி, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஆள்புலத்தினுள் விற்கப்படக்கூடாது; மற்றும்

(இ) அரசாங்கத்தின் பரிந்துரைக்கும் ஆலோசனைக்கும் உட்பட்டு, GGGI தனது உத்தியோகபூர்வ பாவனைக்காக இறக்குமதி செய்யப்படும் பண்டங்கள் அல்லது நிறுவனத்தின் வெளியீடுகள் தொடர்பான சுங்க வரிகளிலிருந்து விலக்களிப்பு.

(2) GGGI தனது உத்தியோகபூர்வ பாவனைக்காக உள்நாட்டில் கொள்வனவு செய்யும் பொருட்கள் மீதான வரிவிதிப்புகளுக்கு விதிவிலக்குண்டு. அத்தகைய விலக்கானது, ஏற்பாடுகளுக்கு அமைவாக அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

(3) GGGI, அதன் அதிகாரிகள் மற்றும் நிபுணர்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தொழிலாளர் மற்றும் சமூக பாதுகாப்பு குறித்த விதிமுறைகளுக்கு உட்பட்டதாகவிருத்தல் கூடாது.

(4) பொதுப் பயன்பாட்டுக் கட்டணங்கள் தவிர்ந்த எந்த வரி அல்லது தீர்வை செலுத்தல், நிறுத்தி வைத்தல் மற்றும் சேகரித்தல் ஆகியவற்றிலிருந்து GGGI இற்கு விலக்களிக்கப்படும். GGGI இனால் கொடுக்கப்படும் சம்பளங்கள், உதவித்தொகைகள் மற்றும் ஊதியங்கள் தொடர்பில் அல்லது எல்லா விதமான வரிவிதிப்புக்களிலிருந்தும் அதன் அதிகாரிகளுக்கு விலக்களிக்கப்படும்.

### உறுப்புரை 5

### தொடர்பாடல்கள்

(1) வேறெந்த சர்வதேச நிறுவனங்களுக்கும் நடத்தப்படுவதைப் போல, GGGI இன் உத்தியோகபூர்வ தொடர்பாடல்களுக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் இசைவளிக்கப்படும்.

(2) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஆள்புலத்திற்கு, ஆள்புலத்திலிருந்து மற்றும் ஆள்புலத்தினூடாகச் செல்லும் எல்லா தொடர்பாடல்களும், அவை எந்த வகையாயிருந்தாலும் அல்லது எங்கிருந்து அனுப்பப்பட்டிருந்தாலும் மற்றும் வேறு எந்த வகையான பொருள் விளக்கமாக அல்லது இடையூறாக இருப்பினும் அவற்றிற்கு தணிக்கையிலிருந்து விலக்களிக்கப்படும். அரசாங்கத்திற்கும் GGGI இற்கும் இடையேயான ஆலோசனைக்குப் பிறகு தீர்மானிக்கப்படவேண்டிய பொருத்தமான பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை ஏற்றுக்கொள்வதை இது தடுக்காது.

(3) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினுள் விரைவஞ்சல் அல்லது முத்திரையிடப்பட்ட பைகள் மூலமாக தொடர்பாடல்கள் அல்லது பிற கடிதங்களைப் பெறவோ, அனுப்பவோ மற்றும் குறியீடுகளைப் பயன்படுத்தவோ GGGI இற்கு உரிமையுண்டு. இதேமாதிரியான சர்வதேச நிறுவனங்களின் விரைவஞ்சல்கள் மற்றும் பைகளுக்கு அளிக்கப்படும் விலக்குரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளை விட இது குறைவானதாக இருக்காது.

### உறுப்புரை 6

### ஒன்றுகூடல், கூட்டங்கள் மற்றும் மாநாடுகள் நடாத்துவதற்கான சுதந்திரம்

(1) அரசாங்கத்தின் இசைவுடன் GGGI இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் கூட்டங்களைக் கூட்டலாம்.

(2) GGGI மற்றும் அதன் அதிகாரிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கமைவாக, இலங்கையில் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் ஆலோசனைகளை நடாத்துவதற்குரிய சுதந்திரத்தைப் பெற்றுள்ளனர்.

(3) தேவைப்படின், GGGI இனால் ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டங்களுக்காக அழைக்கப்பட்ட மற்றும் ஒப்புதல் பெற்ற சகல நபர்களுக்குமான வீசாக்கள் மற்றும் நுழைவு அனுமதிகள் போன்றவை, பொருத்தமான சட்டங்களுக்கு அமைவாக, முடிந்தவரையில் வேகமாக செய்துமுடிக்கப்படும்.

### உறுப்புரை 7

### கொடி, சின்னம் மற்றும் அடையாளங்கள்

GGGI தனது வளாகங்கள் மற்றும் வாகனங்களில் தனது கொடி மற்றும்/அல்லது பிற அடையாளங்களை வெளிப்படுத்துவதற்காக உரிமையைக் கொண்டுள்ளது.

### உறுப்புரை 8

### GGGI இன் ஒன்றுகூடல் அவை மற்றும் ஆலோசனைக் குழுவில் சேர்ந்துருவாக்கப்பட்ட GGGI இன் உறுப்பினர்கள், அதிகாரிகள், நிபுணர்கள் மற்றும் பிற நபர்களின் பிரதிநிதிகளின் சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகள்

(1) GGGI இன் ஒன்றுகூடல் அவை மற்றும் ஆலோசனைக் குழுவில் சேர்ந்துருவாக்கப்பட்ட உறுப்பினர்கள், அதிகாரிகள், நிபுணர்கள் மற்றும் பிற நபர்களின் பிரதிநிதிகள் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளும்போதோ அல்லது GGGI இனால் கூட்டப்படும் கூட்டங்களுக்குச் செல்லும்போதோ திரும்பி வரும்போதோ, இலங்கையின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு, பின்வரும் சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகளை அனுபவிப்பர்:

(அ) GGGI விலக்குரிமையைக் கைவிட்டாலே தவிர, அவர்கள் தமது உத்தியோகபூர்வ தகுதியில் மேற்கொள்ளும் செயற்பாடுகள் தொடர்பில் சட்ட செயற்பாட்டிலிருந்து விலக்குரிமையைக் கொண்டிருப்பர்,

(ஆ) அவர்கள் உள்ளூர் பிரஜைகள் அல்லது குடிமக்களாக இல்லாதவிடத்து, குடிவரவு தேவைகள், வெளிநாட்டார் பதிவிடல் தேவைகள் மற்றும் தேசிய சேவை கடப்பாடுகள் ஆகியவற்றையும் பிற சர்வதேச நிறுவனங்களில் ஒப்பிடத்தக்க தரத்திலுள்ள நபர்களுக்கு இலங்கையால் வழங்கப்படும் பரிமாற்ற விதிமுறைகள் ஆகியவற்றையும் பொறுத்தவரையில், அவர்கள் ஒரேவிதமாக நடத்தப்பட்டு, அதே வசதிகளும் அளிக்கப்படும் ; மற்றும்

(இ) பிற சர்வதேச நிறுவனங்களில் ஒப்பிடத்தக்க தரத்திலுள்ள நபர்களுக்கு இலங்கையால் வழங்கப்படும் அதே மாதிரியான பயண வசதிகள் வழங்கப்படும்.

(2) பிற சர்வதேச நிறுவனங்களில் ஒப்பிடத்தக்க தரங்களிலுள்ள அதிகாரிகளுக்கு வழங்கப்படும் அதே சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகளை, GGGI இன் பணிப்பாளர் நாயகம், பிரதி பணிப்பாளர் நாயகங்கள், உதவி பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் பிற அதிகாரிகளுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கும். இவர்களின் வாழ்க்கைத் துணை மற்றும் பராயமடையாத பிள்ளைகளைப் பொறுத்தவரையிலும் இதே வசதிகள் வழங்கப்படும். இதன்படி, GGGI, இந்த உறுப்புரையின் பந்திகளிலுள்ள நபர்களின் பெயர்களை இலங்கை அரசாங்கத்திற்கு அடிக்கடி அறிவிக்கவேண்டும்.

(3) இந்த உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரஜைகளுக்குப் பொருந்தாது.

(4) இந்த உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புரிமைகள், விலக்குரிமைகள் மற்றும் வசதிகள் தொடர்பில் எந்தவொரு துஷ்பிரயோகங்களும் இடம்பெறாமல் தவிர்ப்பதற்கும் முறையான நீதி நிர்வாகத்தை எளிதாக்குவதற்கும், அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு GGGI ஒத்துழைப்புக் கொடுத்தல் வேண்டும்.

(5) மேற்குறிப்பிட்ட நபர்களால் மோட்டார் போக்குவரத்து தொடர்பில் இழைக்கப்படும் குற்றங்களுக்கான மற்றும் அவர்களுக்குச் சொந்தமான அல்லது அவர்களால் செலுத்தப்படும் மோட்டார் வாகனத்தால் ஏற்படுத்தப்படும் பாதிப்புக்களுக்கான சட்ட செயன்முறையிலிருந்தான விலக்குரிமை அவர்களுக்குப் பொருந்தாது.

### உறுப்புரை 9

### அலுவலக வளாகங்கள்

(1) இந்த ஒப்பந்தத்தில் வேறுவிதமாக வழங்கப்பட்டிருந்தாலே தவிர, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டங்கள் இதன் அலுவலகத்திற்குள் பொருந்தும் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நீதிமன்றங்கள் அலுவலகத்தில் செய்யப்படும் செயல்கள் மீதான அதிகார வரம்பைக் கொண்டிருக்கும்.

(2) இந்த அலுவலக வளாகங்கள் மீறப்படமுடியாதவை மற்றும், GGGI இன் கட்டுப்பாட்டிலும் அதன் அதிகாரத்தின் கீழும் இருக்கும். GGGI இன் நிபந்தனைகளுக்கு உடன்படாமலோ அல்லது அதன் அனுமதி இல்லாமலோ இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிகாரிகள் அதன் அலுவலக வளாகங்களுக்குள் நுழைந்து எந்தவிதமான கடமைகளையும் ஆற்றமுடியாது. தீயணைப்பு, துப்புரவு ஒழுங்குமுறைகள் அல்லது அவசரகாலங்களின்போது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிகாரிகள் எந்த சூழ்நிலைகளில் மற்றும் எந்த முறையில் இந்த அலுவலக வளாகங்களுக்குள் நுழையலாம் என்பது தொடர்பில் GGGI உம் அரசாங்கமும் உடன்படுதல் வேண்டும்.

(3) சம்பந்தப்பட்ட இலங்கை அரசாங்க அதிகாரிகளிடமிருந்து தேவையான அனுமதிகளைப் பெற்றதைத் தொடர்ந்து, GGGI இன் அலுவலகத்தினுள்ளும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு வெளியேயும் அவசியமான தொடர்பாடல்களை ஏற்படுத்திக்கொள்வதற்காக, ஒவ்வொரு முனைகளுக்கும் இடையிலான தொலைத் தொடர்பு வசதிகள் மற்றும் பிற தொடர்பாடல் மற்றும் அனுப்புதல் வசதிகளை பொருத்துவதற்கும் இயக்குவதற்கும், GGGI இற்கு உரிமையுண்டு.

(4) GGGI தனது செயற்பாடுகளை முழுமையாகவும் சுதந்திரமாகவும் இயக்குவதற்காக, அதன் அலுவலக வளாகங்களுக்குள் தொழிற்பாட்டு விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் மேற்கொள்வதற்குரிய அதிகாரத்தைக் கொண்டுள்ளது. அத்தகைய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில், இலங்கை அரசாங்கத்தின் சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளே மேலோங்கும்.

(5) இலங்கையின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்குட்பட்டு, GGGI தனது அலுவலக வளாகங்களுக்குள் கூட்டங்களைக் கூட்டும் உரிமையைப் பெற்றுள்ளது.

(6) இந்த அலுவலக வளாகங்கள், GGGI இன் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் பயன்படுத்தப்படுதல் வேண்டும். தண்டனையிலிருந்து தப்பித்தோர் அல்லது நாடுகடத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட நபர்கள் அல்லது சட்ட செயன்முறை அல்லது நீதிமுறை நடவடிக்கைகளைத் தவிர்க்கும் நபர்களுக்கோ தஞ்சமளிக்கும் இடமாக தமது அலுவலக வளாகங்கள் அமையாதவாறு GGGI தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

(7) இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட சிறப்புரிமைகள், விலக்குரிமைகள் மற்றும் வசதிகளுடன் தொடர்புடைய எந்தவொரு துஷ்பிரயோகங்களும் இடம்பெறாமல் தவிர்ப்பதிலும், பொலிஸ் விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதிலும், முறையான நீதி நிருவாகத்திற்கு வசதியேற்படுத்திக் கொடுப்பதற்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் GGGI எல்லா நேரங்களிலும் ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும்.

### உறுப்புரை 10

### இடைமாற்றுப் பயணம் மற்றும் வதிவிடம்

(1) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினை வதிவிடமாகக்கொண்ட அலுவலகத்தில் நியமிக்கப்பட்ட பின்வரும் நபர்களுக்கு அரசாங்கம், இலங்கையின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்குட்பட்டு, அவர்களின் பிரஜாவுரிமையைப் பொருட்படுத்தாமல் மற்றும் கட்டுப்பாடின்றி, அவர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிலிருந்து வெளியேறவும், உள்நுழையவும், சுதந்திரமாக நடமாடவும் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும்:

(அ) ஒன்றுகூடல் அவை, கழகம் மற்றும் ஆலோசனைக் குழுவில் சேர்ந்துருவாக்கப்பட்ட GGGI உறுப்பினர்களின் பிரதிநிதிகள் மற்றும் பிற நபர்கள், தமது செயற்பாடுகளைச் செய்யும்போதும், GGGI இனால் கூட்டப்படும் கூட்டங்கள் நடக்கும் இடத்திற்குப் போகும்போதும் வரும்போதும் ;

(ஆ) GGGI இன் அதிகாரிகள் ;

(இ) நிபுணர்கள் ;

(ஈ) GGGI இனால் அலுவலகத்தில் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் மற்றும் அதிகாரிகளின் வதிவிட ஊழியர்கள் மற்றும் வாழ்க்கைத்துணை மற்றும் பருவமடையாத சிறுவர்கள் ; மற்றும்

(உ) உத்தியோகபூர்வ கடமைக்காக GGGI இனால் அழைக்கப்பட்ட பிற நபர்கள். அத்தகைய நபர்களின் பெயர்களை, அவர்கள் வருவதற்கு முன்னர் GGGI அரசாங்கத்திடம் வழங்கும்.

### உறுப்புரை 11

### சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகளை கைவிடுதல்

(1) இந்த உடன்படிக்கையினால் நபர்களுக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகள் யாவும் GGGI இன் நலன்களுக்காகவே தவிர, தனிப்பட்டவர்களின் சொந்த நன்மைக்காகவல்ல. இத்தகைய சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகளை அனுபவிக்கும் எல்லா நபர்களுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டங்கள்

மற்றும் விதிமுறைகளின் எல்லா அம்சங்களையும் கடைப்பிடிக்கவேண்டிய கடமையுண்டு. பின்வரும் அதிகாரிகள், ஒரு விலக்குரிமையானது நீதியின் போக்கைத் தடுக்குமெனவோ GGGI இன் நலன்களுக்கு பாரபட்சமின்றி கைவிடப்படலாம் எனவோ அபிப்பிராயம் கொண்டால், ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் பின்வரும் நபர்களின் விலக்குரிமையை கைவிடுவதற்கு உரிமையுள்ளவர்களாவார்:

(அ) GGGI இன் உறுப்பினர்கள், ஒன்றுகூடல் மற்றும் சபை குறித்து அவர்களது பிரதிநிதிகள் தொடர்பில் ;

(ஆ) GGGI இன் பணிப்பாளர் நாயகம் தொடர்பில் ஒன்றுகூடல் ;

(இ) நிபுணர்கள் தொடர்பான சபை அல்லது சபையில் உறுப்பினர்களாக சேவையாற்றும் அரசு சாராத செயற்பாட்டாளர்கள் அல்லது ஆலோசகர் குழு ; மற்றும்

(ஈ) GGGI இன் அதிகாரிகள் (தன்னைத் தவிர), நிபுணர்கள் மற்றும் GGGI தொடர்பில் GGGI இன் பணிப்பாளர் நாயகம்.

(2) கைவிடுதலானது, எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எழுத்து மூலமாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.